IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.90/2022
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா. 1 சாட்சி ராசுத்தேவர் த.பெ.பெரியகருப்பத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 10.02.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1.எனக்கு பூர்வீகம் சித்தாலை ஆகும். எனது தாத்தா பெயர் முத்துஇருளத்தேவர் ஆகும். என்னுடைய பிராதில் தாவாச் சொத்து பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனது தந்தை பெயரிலோ அல்லது எனது தாத்தா பெயரிலோ உள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வாங்கிய 3/4 செண்டு இடத்தை நான் அனுபவம் செய்து வந்த நிலையில் பிரதிவாதிகள் அவர்களது இடம் என்று கூறியதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எத்தனை இலக்கச் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2இலக்க சொத்துக்கள் ஆகும். 1வது இலக்கச் சொத்து பூர்வீக சொத்தா என்றால் அது கிரையச் சொத்து ஆகும். 2 வது இலக்கச் சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்வீக சொத்து ஆகும்.

3. வழக்குச் சொத்து நன்செய் நிலமா என்றால் புன்செய் நிலம் ஆகும். 2ம்வாதி எனது மகன் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை 2ம்வாதிக்கு எதிராக 2020ல் வழக்குச் சொத்து பட்டா எனது பெயருக்கு தவறுதலாக ஏற்பட்டது என்று புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி புகார்மனுவின் பேரில் 2ம்வாதியும் வழக்கறிஞர் மூலம் விசாரணைக்கு ஆஜரானார் என்றால் நான்தான் விசாரணைக்கு ஆஜரானேன்.

4. மேற்படி விசாரணையில் மாவட்ட வருவாய் அலுவலர் எனது தரப்பு ஆவணத்தை கேட்டாரா என்றால் கேட்டார் நான் தாக்கல் செய்தேன். மேற்படி விசாரணையின் பேரில் உத்தரவு பிறப்பித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விசாரணையின் பேரில் உத்தரவு 10.3.2022ல் பிறப்பிக்கப்பட்டு உத்தரவு நகல் எனக்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவிற்கு பின்னிட்டுதான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி உத்தரவில் வழக்குச் சொத்தை பொறுத்த பட்டாவானது தவறுதலாக எனது பெயரில் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மாவட்ட வருவாய் அலுவலர் /கூடுதல் ஆட்சியரின் உத்தரவு விபரம் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1, 2, 3, 6ஆவணங்கள் நிலஉடைமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் என் பெயரில் தவறுதலாக ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

6.வா.சா.ஆ.1, 2, 3, 6ஆவணங்கள் எனக்கு வழக்குச் சொத்தை பொறுத்து எவ்வித அனுபவமோ, பாத்தியமோ கொடுக்காது என்றால் சரியல்ல. 1982ல் ஜெயராமன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன்

என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஜெயராமனுக்கு அந்த சொத்து பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தா என்றால் பூர்வீக சொத்துதான். மேற்படி ஜெயராமன் மூதாதையர்கள் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றாலும், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் ஆவணம் உள்ளது தாக்கல் செய்யவில்லை.

7. வருவாய் நிலை ஆணையின்படி ஒரு பட்டாவை ஆஜர்பட்டாதாரரின் வாரிசுகளோ அல்லது அவரோதான் வில்லங்கப்படுத்த முடியும் என்றால் தெரியாது. எனக்கு கிரையம் கொடுத்த ஜெயராமன் ஆஜர்பட்டாதாரரும் கிடையாது, வாரிசுதாரரும் கிடையாது என்றால் சரியல்ல. ஆஜர்பட்டாதாரர் அல்லாத ஜெயராமன் தாவாச் சொத்தை எழுதிக்கொடுப்பதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

8. மேற்படி ஜெயராமன் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.4 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் செல்லாது என்பதால் அதனடிப்படையில் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து ஆதியில் பொன்னுச்சாமி (எ) வீரணத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

9. மேற்படி பொன்னுச்சாமி (எ) வீரணத்தேவர் தனக்காகவும், தனது மைனர் பிள்ளைகளுக்காகவும் 1951ல் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு ஒருபகுதி சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1980ம் வருடம் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்கள் பொன்னுச்சாமிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1951, 1980 ஆவணங்களின் அடிப்படையில் வழக்குச் சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

10. தாவாச் சொத்திற்கு நிலஉடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரும் கிரையதாரருமான மாசாணத்தேவர் மகன் பொன்னுச்சாமி என்பவர் பெயரில் பட்டா எண் 305 தாக்கலாகி இருந்தது என்றால் சரியல்ல. UDR காலத்திற்கு முன்பு வழக்குச் சொத்தின் பட்டா பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்கள் பெயரில் இருந்தது என்றும் UDR காலத்திற்கு பிறகு தவறுதலாக பட்டா என்பெயருக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

11. UDR காலத்தில் எனது பெயரில் தவறுதலாக பட்டா ஏற்பட்ட விபரம் தெரிந்து உரிய அதிகாரியிடம் மனுசெய்து மேற்படி மனுவின் பேரில் விசாரணை செய்யப்பட்டு எனது பெயரில் ஏற்பட்ட பட்டா தவறுதலான பட்டா என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் பெயரில் பட்டாபெயர்மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

12. மாவட்ட வருவாய் அலுவலரிடம் பிரதிவாதிகள் விண்ணப்பம் செய்த போது அதற்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். மேற்படி ஆட்சேபனை தாக்கல் செய்த பின்னிட்டுதான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் வருவாய்துறை நடவடிக்கைகள் எதையும் குறிப்பிடாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. தாவாச் சொத்து பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரான பொன்னுச்சாமிக்கு பாத்தியப்பட்டு அவரது காலத்திற்கு பின்னிட்டு பிரதிவாதியின் தகப்பனாருக்கு கிடைக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவாச் சொத்து பிரதிவாதிகளுக்கு அவர்களது தந்தை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை

பிரதிவாதிகள் உரிமைமூலம் அடிப்படையிலும், அனுபவம் அடிப்படையிலும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

14. மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவை வழக்கிற்காக தெரியாது என்று சொல்வதற்கு காரணம் என்னவென்றால் மேற்படி உத்தரவு குறித்து நீதிமன்றத்தில் எதிர்வாதம் எதுவும் செய்யவில்லை என்பதாலேயே என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து 1951, 1980 பதிவு ஆவணங்களின் படியும், வருவாய்துறை உத்தரவின்படியும் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல.

15. நிலஉடைமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட தவறான பட்டாவை ஊர்ஜிதம் செய்ய 2ம்வாதியாகிய எனது மகனுக்கு தானம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு உரிமையில்லாத நிலையில் நான் 2ம்வாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.